Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No.707/2005**

**Deposition of witness for: PW - 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கண்ணன்** | **Father/Husband Name** | : | **அய்யம்பிள்ளை** |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **02.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**
நான் தற்போது திருவாதவூர், மேலத்தெருவில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னுடன் சேர்ந்து சாட்சிக்கையொப்பம் செய்த கோவில்பட்டியை சார்ந்த சாட்சியை எனக்குத் தெரியும். கையொப்பத்தை அருண் வீட்டிற்கு அருகில் வைத்து போட்டுக்கொடுத்தோம். அதிலுள்ள விவரங்கள் எனக்குத்தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை அரசுதரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)

24.03.2005-ம் தேதி மதியம் சுமார் 01.40 மணிக்கு மேலூர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற எண்.445/2005 வழக்கின் சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், சாட்சி முருகன் முன்னிலையிலும் பார்வையிட்டு, பார்வை மகஜர் தயார் செய்தார், அதில் நானும் சாட்சி முருகனும் கையொப்பம் செய்துகொடுத்தோம், அதில் என்ன எழுதியிருந்தன என்ற விவரங்கள் எல்லாம் எனக்குத்தெரியும். மேலும் போலீசார் இது சம்பந்தமாக விசாரித்தபோது நடந்த உண்மையை போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மை சங்கதியை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.